www.ecourtsindia.com

**IN THE COURT OF I ADDITIONAL SPECIAL JUDGE,**
**SPECIAL COURT UNDER NDPS ACT, CHENNAI-104**
**(Chapter XXIII code of Criminal Procedure)**

**CALENDER CASE NO. 375/2023**

**DEPOSITION OF WITNESS FOR P.W.2**

| | |
|---|---|
| NAME | : Thenmozhi |
| FATHER/HUSBAND NAME | : Thirumurugan |
| OCCUPATION | : W Gr.I PC |
| AGE | : 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the date :14.03.2025

**முதல் விசாரணை-**

நான் தற்போது கே2 அயனாவரம் காவல் நிலையத்தில் முதல் நிலை பெண் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022ம் ஆண்டு ஜி5 தலைமை செயலக குடியிருப்பு காவல் நிலையத்தில் பெண் காவலராக பணி செய்து கொண்டிருந்தேன். 29.08.2022 அன்று நான் பகல் சுற்று காவல் பணி செய்து கொண்டிருந்தேன். காலை 09.30 மணியளவில் உதவி ஆய்வாளர் மீனா அவர்கள் என்னிடமும் காவலர் திருநாவுக்கரசு என்பவரிடமும் கஞ்சா விற்பது தொடர்பாக தனக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளதாகவும் அதன்படி தான் அங்கு செல்லயிருப்பதாகவும் எனவே எங்களை இருவரையும் அவருடன் வருமாறும் கூறினார். சம்பவ இடமான தீடீர்நகர் மாதா கோவில் அருகில் காலை சுமார் 10.00 மணிக்கு சென்றோம். தனக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் உதவி ஆய்வாளர் அங்கு நின்று கொண்டிருந்த எதிரி தேவகி என்பவரை பார்த்து இவர்தான் தகவலாளி சொன்ன நபர் என அனுமானித்து அவரிடம் சென்று உதவி ஆய்வாளர் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். பின்னர் விசாரித்து தகவலாளி சொன்ன நபர் அவர்தான் உறுதி செய்து கொண்டார். பின்னர் உதவி ஆய்வாளர் சட்ட விதிமுறைகளை பின்பற்றி அவரை சோதனை

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH0A0037852023/truecopy/order-2.pdf

செய்து அவரிடமிருந்து கருப்பு நிற பாலித்தீன் கவரை வாங்கி பிரித்து பார்த்தபோது அதனுள் கஞ்சா இருந்தது. அதனை நாங்கள் நிலையத்திலிருந்து எடுத்து சென்ற எடை தராசைக்கொண்டு எடைபோட்டு பார்த்தபோது 01.300 கிலோ கிராம் கஞ்சா இருந்தது. பின்னர் அதிலிருந்து ரசாயன பகுப்பாய்விற்காக தலா 50 கிராம் கொண்ட இரண்டு மாதிரி எடுத்து காக்கி நிற காகித கவரில் மடித்து நூலால் கட்டி அரக்கு சீல் வைத்து உதவி ஆய்வாளர் கையெழுத்திட்டார். அதில் நாங்களும் சாட்சியாக கையெழுத்திட்டோம். மீதமிருந்த கஞ்சாவையும் காக்கி நிற கவரில் கட்டி முன்பு போலவே சீலிட்டு விவர லேபில் எழுதி ஒட்டி அதில் உதவி ஆய்வாளர் கையெழுத்திட்டார். அதில் நாங்களும் சாட்சியாக கையெழுத்திட்டோம். மாதிரிக்காக எடுக்கப்பட்ட கஞ்சா மற்றும் மீதமிருந்த கஞ்சா தனிதனியாக குறியீடு செய்யப்பட்டது. மீதமிருந்த கஞ்சாவிற்கு P1 என குறியீடு செய்யப்பட்டது. இதற்காக ஒரு கைப்பற்றுதல் மகசர் தயாரித்து எதிரியிடமும் எங்களிடமும் உதவி ஆய்வாளர் கையெழுத்து பெற்றார். பின்னர் சம்பவ இடத்தில் வைத்தே எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து உதவி ஆய்வாளர் எதிரியிடம் கையொப்பம் பெற்று தானும் கையொப்பமிட்டார். சாட்சியாக நாங்களும் கையெழுத்திட்டோம். பின்னர் எதிரியிடம் கைதிற்கான காரணத்தை கூறி உதவி ஆய்வாளர் கைது செய்தார். அதற்காக ஆய்வு நமூனா தயார் செய்து அதில் அவர் உதவி ஆய்வாளர் கையெழுத்திட்டார். பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து தனி அறிக்கை தயாரித்து ஆய்வாளர் வசம் ஒப்படைத்தார். ஆய்வாளர் என்னை விசாரித்தார். நான் நடந்தவற்றை கூறினேன்.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH0A0037852023/truecopy/order-2.pdf

## குறுக்கு விசாரணை

உதவி ஆய்வாளர் எதிரியை சம்பவ இடத்தில் வைத்தே கைது செய்துவிட்டார். மாதா கோவிலிருந்து 10 அடி தொலைவில் நாங்கள் பார்த்தபோது எதிரி நின்று கொண்டிருந்தார். எதிரியை தகவலாளி சம்பவ இடத்தில் வைத்து அடையாளம் காட்டினாரா என்று எனக்கு தெரியாது. எதிரிக்கு எழுத படிக்க தெரியுமா என்று எனக்கு தெரியாது. ஆய்வாளர் என்னை நிலையத்தில் வைத்து விசாரித்தார். அ.த.சா.ஆ.2 அறிவிப்பில் எதிரி படித்து பார்த்து தெரிந்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி தனக்கு எழுத படிக்க தெரியாது என்று கூறியுள்ளார் என்றால் அது தற்போது நினைவில்லை. அ.த.சா.ஆ.2 சோதனை அறிவிப்பு எதிரியிடமிருந்து எத்தனை மணிக்கு கையெழுத்து பெறப்பட்டது என தற்போது நினைவில்லை. கைப்பற்றுதல் மகசர் என் முன்னிலையில்தான் தயாரிக்கப்பட்டது. கைப்பற்றுதல் மகசர் காலை சுமார் 10.45 மணியளில் தாயரிக்கப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலம் அன்று மதியம் 12.15 மணியளவில் பெறப்பட்டது. நான் சொல்வது போல் ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகசர், சோதனை அறிவிப்பு, கைது நமூனா போன்ற எந்த ஆவணமும் என் முன்னிலையிலோ அல்லது சம்பவ இடத்தில் வைத்தோ தயாரிக்கப்பட்டவில்லை என்றும் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்ட இநத் பொய் ஆவணங்கள் அடிப்டையில் ஒரு புள்ளி விவரத்திற்காக எதிரிக்கு எதிராக இவ்வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் தவறு. வழக்கு ஆவணங்கள் எதிலும் எதிரி கையெழுத்திடவில்லை என்றும் அதன் நகல் அவருக்கு வழங்கப்படவில்லை என்றும் சொன்னால் தவறு. எதிரி காவல் நிலையம் வரவழைக்கப்பட்டு கைது செய்யப்பட்டார் என்றால் சரியல்ல.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH0A0037852023/truecopy/order-2.pdf

www.ecourtsindia.com

எதிரியிடமிருந்து வழக்கு சொத்துகள் கைப்பற்றப்படவில்லை என்றால் தவறு. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சாட்சி சரி என்று சொல்லி கையொப்பம் செய்தார்.

I ADDITIONAL SPECIAL JUDGE
SPECIAL COURT UNDER NDPS ACT,
CHENNAI-104

www.ecourtsindia.com
This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH0A0037852023/truecopy/order-2.pdf